திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,

ந.க.எண்.525/2019/பேரூ2. நாள்: 18.06.2020.

பொருள்: நேரடி நியமனம்– தமிழ்நாடு அமைச்சுப்பணி– தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2015–16, 2016–17 மற்றும் 2017–18ஆம் ஆண்டுகளுக்கு நடத்தப்பட்ட போட்டித் தேர்வு– இளநிலை உதவியாளர் உள்ளிட்ட தொகுதி 4ல் அடங்கிய பணிகள் –திண்டுக்கல் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு–தேர்வாளர் விபரம் அனுப்பி வைக்கப்பட்டது– திண்டுக்கல் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது– பணி நியமனம் செய்தது– பணிவரன்முறை செய்து ஆணையிடல்–தொடர்பாக.

பார்வை:
1. சென்னை, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய தேர்வுகள் செயலாளர் கடிதம் எண்.920/பிஎஸ்டி–சி3/2019 நாள் 13.02.2019.
2. திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.525/2019/பேரூ2, நாள்: 26.02.2016.
3. தொடர்புடைய ஆவணங்கள்.

------

ஆணை:–

சென்னை, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய தேர்வுகள் செயலாளரது பார்வை–1ல் காணும் கடிதத்தில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தால் 2015–16, 2016–17 மற்றும் 2017–18ஆம் ஆண்டுகளுக்கு நடத்தப்பட்ட போட்டித் தேர்வில் பின்வரும் விபரப்படி தேர்வு பெற்றவர்களுக்கு திண்டுக்கல் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு நியமனம் செய்ய ஒதுக்கீடு செய்து பணியிட நியமன ஆணை வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பார்வை–2ல் காணும் செயல்முறைகளின்படி வரிசை எண்.1ல் உள்ள திரு எஸ்.விக்னேஷ். என்பவருக்கு அம்மையநாயக்கனூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராகவும், வரிசை எண்.2ல் உள்ள திரு. பி.அம்மாமுத்து என்பவருக்கு வத்தலக்குண்டு பேரூராட்சியில் இளநிலை உதவியாளராகவும், வரிசை எண்.3ல் உள்ள திரு எஸ்.நவீன் என்பவருக்கு பாளையம் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராகவும், பணியிடம் வழங்கி ஆணையிடப்பட்டது. திரு. எஸ்.விக்னேஷ் என்பவர் 01.03.2019–லும், திரு.பி.அம்மாமுத்து என்பவர் 04.03.2019லும், திரு எஸ்.நவீன் என்பவர் 08.03.2019–லும் அப்பேரூராட்சிகளில் பணியேற்று பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் கடிதத்திற்கிணங்க தொகுதி–4ன் தேர்வு தொடர்பாக சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள நீதிப் பேராணை வழக்குகளின் முடிவுகளுக்கு உட்பட்டது என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியர்கள் பணியேற்றுக் கொண்ட நாள் முதல் இவர்களது பணியினை வரன்முறை (Service Regularaization) செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின்பெயர் | பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | பணியேற்ற நாள் |
|---|---|---|---|
| 1 | எஸ்.விக்னேஷ், | இளநிலை உதவியாளர் அம்மையநாயக்கனூர் பேரூராட்சி, | 01.03.2019 முப |
| 2 | பி.அம்மாமுத்து, | இளநிலை உதவியாளர் வத்தலக்குண்டு பேரூராட்சி, | 04.03.2019 முப |
| 3 | எஸ்.நவீன், | இளநிலை உதவியாளர் பாளையம் பேரூராட்சி. | 08.03.2019 முப |

பணி வரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் இவர்களது தகுதிகாண் பருவகாலம் தொடங்குகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,

பெறுநர்
1.திரு எஸ்.விக்னேஷ், இளநிலை உதவியாளர், அம்மையநாயக்கனூர் பேரூராட்சி,
2. பி.அம்மாமுத்து, இளநிலை உதவியாளர், வத்தலக்குண்டு பேரூராட்சி,
3. எஸ்.நவீன், இளநிலை உதவியாளர்,பாளையம் பேரூராட்சி.
(செயல் அலுவலர் வழியாக)

நகல்:- 1) பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை – 108.
2) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை –2.
3)செயல் அலுவலர்,அம்மையநாயக்கனூர்,வத்தலக்குண்டு,மற்றும்பாளையம் பேரூராட்சிகள், திண்டுக்கல் மாவட்டம்